**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 28/2025**

**வா.சா.1 – சம்சாத்பேகம்**

**27–10–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். இந்த வழக்கு பாகப்பிரிவினை கேட்டு போட்டுள்ளேன். நான் எனது சகோதரர் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மும்தாஜ், மெஹராஜ் பேகம், சிராஜ்னிசா, சாதிக்அலி, ஐஸாமா மற்றும் நான் சேர்ந்து எனது சகோதரர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் நாசர் அலி மட்டும் தான் குடியிருக்கிறார் என்றால் நாங்கள் அனைவரும் அங்குதான் இருந்தோம், தற்போது தம்பி மட்டும்தான் உள்ளார். நாங்கள் போகவர உள்ளோம். எனக்கு 37 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. 37 ஆண்டுகளாக காங்கேம் ரோடு, மமுசா வீதியில் எனது கணவரின் வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான்.

2. மும்தாஜ், மெஹராஜ் பேகம், சிராஜ்னிசா, ஐஸாமா ஆகியோர்களுக்கு திருமணம் ஏற்பட்டு அவரவர் கணவர் வீட்டில் இருக்கிறார்கள் என்றால் ஐஸம்மா மட்டும் விவாகரத்த ஏற்பட்டடு தனியாக உள்ளார். மற்றவர்கள் அவரவர் கணவர் வீட்டில் உள்ளார்கள். ஐஸம்மாள் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர் அங்கு போகவர உள்ளார். நான் தான் பராமரிக்கிறேன். ஐஸம்மாள் தற்போது என்னுடன் தான் உள்ளார். சாதிக்அலி என் வீட்டின் அருகே குடியிருக்கிறார் என்றால் சரிதான். சாதிக் அலி எனது வீட்டின் அருகே எவ்வளவு வருடமாக உள்ளார் என்றால் அவரது எனது பக்கத்து கிராமத்தில் 2006ம் வருடத்தில் இருந்து குடியிருக்கிறார்.

3. எனக்கு எனது சகோதரரிகளுக்கு திருமணம் ஏற்பட்டபோது நாசர் அலி வேலைக்கு சென்று எனது அப்பாவிற்கு உறுதுணையாக இருந்து

திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான். நாசல் அலி வழக்கு தாக்கல் செய்யும் வரை சீர் சிறப்புகள் செய்துவந்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் 13.01.2008 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 22.02.2012 ல் எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் இறந்து 13 ஆண்டுகளாக எனது சகோதரர்களிடம் பாகம் கேட்கவில்லை என்றால் ஒரு வருடமாக தான் கேட்கிறோம். தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு நாசர் அலி செலவு செய்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது அப்பா இருக்கும்போதே வீடு கட்டிவிட்டார்.

4. எனது அப்பாவின் இறப்பிற்கு பிறகு பழைய வீட்டை இடித்துவிட்டு புது வீடு கட்டி நாசர் அலி குடியிருந்துவருகிறார் என்றால் சமயலறை மட்டும் கட்டியுள்ளார், ஏற்கனவே இருந்த வீட்டில் நாங்கள் போய்வருகிறோர். நாசர் அலி 20 லச்சம் செலவு செய்து புதிய வீடு கட்டினார் என்றால் சரியல்ல. ரூ.10 லச்சத்தை எனது பெற்றோர்களின் மருத்துவ செலவிற்காக நாசர் அலி செய்துவந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பானார் இறந்த பிறகு தாவா சொத்தில் நானும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் நாகர் அலி சொத்தை வைத்துக்கொள்ளலாம் என்று வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் 13 வருடமாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளோம் என்றும், தாவா சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் தற்போது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தை 13 ஆண்டுகாலமாக நாசர் அலி அனுபவித்து வருதால் நாங்கள் தாவா சொத்தில் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. எங்கள் பங்கு எங்களுக்கு வேண்டும். வீட்டு வரி ரசீது, தண்ணீர் வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது ஆகியவற்றை எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய ரசீது தாக்கல் செய்துள்ளோம். நாசர் அலிக்கு

மட்டும் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் அளவுகள் வீஸ்தீரனங்கள் எனக்கு தெரியாது என்றால் 1 3/4 செண்டு உள்ளது. நீள அகலம் தெரியாது. வழக்கு சொத்து பொறுத்து எனது அப்பாவிற்கு எந்த ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சொத்து எனது பாட்டியின் சொத்து அதனை அவர் பேத்திகள் பெயரில் எழுதிவைத்தார், அதனை நாங்கள் தாயார் பெயரில் எழுதிவைத்தோம். வழக்கு சொத்து பொறுத்து நாங்கள் கேட்ட பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.27 17:00:11 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.